# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

### THE HINDU DATED 18.05.2025



Lt. Governor K. Kailashnathan and Home Minister A. Namassivayam taking part in a Tiranga Rally on Pondicherry University campus.

### MATHRUBHUMI DATED 18.05.2025



ഓപ്പറേഷൻ സിന്ദൂർ സൈനികനടപടിയുടെ വിജയമാഘോഷിക്കുന്നതിന് പോണ്ടിച്ചേരി സർവകലാശാലയിൽ ശനിയാഴ്ച നടന്ന തിരംഗയാത്ര. പുതുച്ചേരി ലെഫ്റ്റനന്റ് ഗവർണർ കെ. കൈലാസനാഥൻ, വിദ്യാഭ്യാസമന്ത്രി എ. നമശിവായം, സർവകലാശാലാ വൈസ്ചാൻസലർ പ്രൊഫ. പി. പ്രകാശ്ബാബു തുടങ്ങിയവരുടെ നേതൃത്വത്തിലായിരുന്നു യാത്ര.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

### DINAMANI DATED 18.05.2025



## புதுவை மத்திய பல்கலை.யில் தேச பக்தி பேரணி

### துணைநிலை ஆளுநர் தொடங்கி வைத்தார்



பயங்கரவாதிகளுக்கு எதிரான இந்திய ராணுவத்தின் ஆபரேஷன் சிந்தூர் வெற்றியைப் பாராட்டி புதுவை மத்திய பல்கலை.யில் சனிக்கிழமை நடைபெற்ற தேசிய பக்தி பேரணியில் மூவர்ணக் கொடி ஏந்தி பங்கேற்ற துணைநிலை ஆளுநர் கே.கைலாஷ்நாதன், அமைச்சர் ஆ.நமச்சிவாயம், கல்யாணசுந்தரம் எம்எல்ஏ, துணைவேந்தர் பிரகாஷ்பாபு உள்ளிட்டோர்.

புதுச்சேரி, மே 17: பயங்கரவாதிகளுக்கு எதிரான இந்திய ராணுவத்தின் ஆபரேஷன் சிந்தூர் வெற்றியைப் பாராட்டி புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் மூவர்ண தேசியக் கொடி அணிவகுப்பு தேச பக்தி பேரணி சனிக்கிழமை நடைபெற்றது.

பாகிஸ்தான் பயங்கரவாதிகளின் நிலைகள் மீது இந்திய ராணுவம் அதிரடித் தாக்குதல் நடத்திய ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கௌரவித்து, பாராட்டி கொண்டாடும் வகையில் புதுவை மத்திய பல்கலைக்கழக வளாகத்தில், தேசபக்திப் பேரணி சனிக்கிழமை காலை நடைபெற்றது.

தொடக்க நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத் துணை வேந்தர் ப. பிரகாஷ் பாபு வரவேற்றார். புதுவை துணைநிலை ஆளுநர் மற்றும் பல்கலைக்கழக தலைமை ரெக்டர் கே. கைலாஷ்நாதன் பேரணியை தொடங்கி வைத்தார். மாநில உள்துறை அமைச்சர் ஆ. நமச்சிவாயம், காலாபட்டு எல். கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பேரணியில், புதுவை மத்திய பல்கலைக்கழகம் மற்றும் உறுப்புக் கல்லூரியான சமுதாய கல்லூரி இணைப்பு பெற்ற கல்லூரிகளைத் சேர்ந்த ஏராளமான மாணவர், மாணவிகள் கலந்து கொண்டனர். மாணவர்கள் தேசியக் கொடிகள் மற்றும் தேச பக்தி பதாகைகளை ஏந்தியபடி தேசபக்தி முழக்கங்களை எழுப்பினர்.

இதில் பல்கலைக்கழக கலாசார உறவுகள் இயக்குநர் கிளமென்ட் சகாயராஜ் லூர்டஸ், பல்கலைக்கழக பதிவாளர் ரஜனிஷ் பூட்டானி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### THE HINDU TAMIL DATED 18.05.2025

இந்து தமிழ் திசை | www.hindutamil.in



● புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக வளாகத்தில் தேசியகொடியேந்தி வெற்றி ஊர்வலம் சென்ற துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ், பாபு, கல்யாணசுந்தரம் எம்எல்ஏ மற்றும் மாணவ, மாணவிகள்.

'ஆப்ரேஷன் சிந்தூர்' தாக்குதல்

## புதுவை மத்திய பல்கலை.யில் தேசிய கொடியேந்தி வெற்றி ஊர்வலம்

■ புதுச்சேரி

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகம் சார்பில் தேசியக்கொடி வெற்றி ஊர்வலம் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடி தரும் விதமாக இந்திய ராணுவ வீரர்கள் தாக்குதல் நடத்தி, நமது ராணுவத்தின் பலத்தை உலகத்துக்கு தெரியப்படுத்தினர். அவர்கள் நடத்திய 'ஆப்ரேஷன் சிந்தூர்' அதிரடித் தாக்குதலுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கும் விதமாக இந்தப் பேரணி நடந்தது.

பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவ, மாணவிகளுடன் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் கலந்து கொண்டு தேசியக்கொடி வெற்றி ஊர்வலத்தை தொடங்கி வைத்தார்.

பேரணியில் புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், கல்யாணசுந்தரம் எம்எல்ஏ, பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு உள்ளிட்டோர் மாணவ, மாணவிகளுடன் ஒருசேர பங்கேற்று, தேசியக் கொடியேந்தி பல்கலைக்கழக வளாகத்தில் ஊர்வலமாக சென்றனர்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

### DAILY THANTHI 18.05.2025



தேசியக்கொடி அணிவகுப்பு பேரணியில் கவர்னர் கைலாஷ்நாதன், அமைச்சர் நமச்சிவாயம், கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்ற காட்சி.

### THINABOOMI DATED 18.05.2025



புதுச்சேரி பல்கலைக்கழகம் சார்பில் கல்லூரி மாணவ,மாணவிகளின் தேசியக்கொடி வெற்றி ஊர்வலத்தை துணைநிலை ஆளுநர் கைலாஷ் நாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அருகில் துணை வேந்தர் பிரகாஷ் பாபு, உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கல்யாணசுந்தரம் மற்றும் பல்கலைக்கழக பதிவாளர், பேராசிரியர்கள் உடன் இருந்தனர்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAKARAN DATED 18.05.2025



ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில்

# புதுச்சேரி பல்கலையில் தேசியக்கொடியுடன் வெற்றி பேரணி

## கவர்னர் கைலாஷ்நாதன் தொடங்கி வைத்தார்



புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில் நடந்த தேசியக்கொடியுடன் வெற்றி பேரணியில் கவர்னர் கைலாஷ்நாதன், அமைச்சர் நமச்சிவாயம், கல்யாணசுந்தரம் எம்எல்ஏ, துணைவேந்தர் பிரகாஷ்பாபு ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதுச்சேரி, மே 18: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில் தேசியக்கொடியுடன் வெற்றி பேரணி நடைபெற்றது. துவக்க விழாவில் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களை துணைவேந்தர் பிரகாஷ் பாபு வரவேற்றார். இப்பேரணியை கவர்னர் கைலாஷ்நாதன் தொடங்கி வைத்து கலந்துகொண்டார். இதில் உள்துறை மற்றும் கல்வி அமைச்சர் நமச்சிவாயம், கல்யாணசுந்தரம் எம்எல்ஏ ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் இணைப்பு கல்லூரிகளை சேர்ந்த 2000க்கும் மேற்பட்ட மாணவர்கள், என்சிசி மாணவர்கள், என்எஸ்எஸ் தன்னார்வலர்கள் கலந்துகொண்டு தேசியக்கொடிகள் மற்றும் தேசபக்தி பதாகைகளை ஏந்திச் சென்று, ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை உறுதிப்படுத்திய இந்திய வீரர்களின் வீரம் மற்றும் தியாகத்திற்கு தங்கள் நன்றியையும், ஆதரவையும், ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தி தேசபக்தி முழக்கங்களை எழுப்பினர்.

பல்கலைக்கழக வளாகத்தின் முக்கிய பகுதிகள் வழியாக நடைபெற்ற இந்த பேரணி, தேசபக்திப் பாடல்களுடன் முடிவடைந்தது. இந்திய வீரர்களின் தியாகங்களை நினைவு கூறும் இந்த நிகழ்வு, பங்கேற்பாளர்களிடையே தேசப்பற்று உணர்வை உருவாக்கியதாக அமைந்தது.

இந்நிகழ்ச்சியில் கலாச்சாரம் மற்றும் கலாச்சார உறவுகள் துறை இயக்குநர் க்ளெமென்ட் சகராஜ் லூர்டஸ், பதிவாளர் ராஜ்னிஷ் பூட்டானி, நிதி அலுவலர் லாசர், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் சதானந்த சுவாமி, நூலகர் விஜயகுமார் மற்றும் பல்வேறு புல முதன்மையர்கள், துறை தலைவர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

THILAI MALAI DATED 18.05.2025

SRI ANNAMALAIYAR ACTING DRIVERS
Good Driver BEST SERVICE D.K.Kumar PUDUCHERRY
860 860 5550 94432 55788

RNI No. PONBIL/2021/82208
Email: thillaimaildaily@gmail.com
THILLAI MAIL
தில்லை மெயில்
மலர் : 4 இதழ் : 335
VOLUME: 4 ISSUE: 335
தினசரி காலை நாளிதழ்
4 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (18-5-2025) ஞாயிற்றுக்கிழமை
PUDUCHERRY(18-5-2025) SUNDAY
செய்திக்கு:94426 34795

புதுவையின் புகழ் பெற்ற ஸ்தாபனம்
கௌதம் ஜீ வல்லரி
ஹோல்சேல் கடை
916 HALLMARK SHOWROOM
+914132339 999, 2333 916, 90475 76000

# புதுவை பல்கலைக்கழகத்தில் ஆபரேஷன் சிந்தூர் தேசபக்கி பேரணி

## ஆளுநர் கைலாஷ்நாதன் தொடங்கி வைத்தார்



புதுச்சேரி, மே.18–

புதுவைப் பல்கலைக்கழகத்தில், நேற்று 17.5.25 இந்திய ஆயுதப்படைகளின் வெற்றிகரமான நடவடிக்கையான ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கௌரவிக்கும் வகையில், தேசபக்தி பேரணியை நடைபெற்றது. இதன் தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினர்களை துணை வேந்தர் பிரகாஷ் பாபு வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் ஆளுநர் கைலாஷ்நாதன் பேரணியை துவக்கிவைத்தார். இதில் புதுச்சேரி அரசின் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், காலாப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் கல்யாணசுந்தரம் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

இந்தப் பேரணியில், புதுச்சேரி பல்கலைக்கழகம், அதன் உறுப்புக் கல்லூரியான சமுதாய கல்லூரி மற்றும் இணைப்பு பெற்ற கல்லூரிகளை சேர்ந்த 2000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

மாணவர்கள் தேசியக் கொடிகள் மற்றும் தேசபக்திப் பதாகைகளை ஏந்திச் சென்று, ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை உறுதிப்படுத்திய இந்திய வீரர்களின் வீரம் மற்றும் தியாகத்திற்கு தங்கள் நன்றியையும், ஆதரவையும், ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தி தேசபக்தி முழக்கங்களை எழுப்பினர்.

பல்கலைக்கழக வளாகத்தின் முக்கிய பகுதிகள் வழியாக நடைபெற்ற இந்தப் பேரணி, தேசபக்திப் பாடல்களுடன் முடிவடைந்தது.

இந்நிகழ்ச்சியில் கலாச்சாரம் மற்றும் கலாச்சார உறவுகள் இயக்குனர் க்ளெமென்ட் சகராஜ் லூர்டஸ், பதிவாளர் ராஜ்னிஷ் பூட்டானி, நிதி அலுவலர் லாசர், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் சதானந்த சுவாமி, நூலகர் விஜயகுமார் மற்றும் பல்வேறு புல முதன்மையர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் பல்கலைக்கழக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

THILAI MALAI DATED 18.05.2025

SRI ANNAMALAIYAR ACTING DRIVERS
Good Driver
BEST SERVICE
D.K.Kumar
PUDUCHERRY
860 860 5550 94432 55788

RNI No. PONBIL/2021/82208
Email: thillaimaildaily@gmail.com
THILLAI MAIL
தில்லை மெயில்
மலர் : 4 இதழ் : 335
VOLUME: 4 ISSUE: 335
தினசரி காலை நாளிதழ்
4 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (18-5-2025) ஞாயிற்றுக்கிழமை
PUDUCHERRY(18-5-2025) SUNDAY
செய்திக்கு:94426 34795

புதுவையின் புகழ் பெற்ற ஸ்தாபனம்
கௌதம் ஜீவல்லரி
ஹோல்சேல் கடை
916 HALLMARK SHOWROOM
+914132339 999, 2333 916, 90475 78000

# Pondy LG inaugurates the National Flag procession at P U



Puducherry, May 18-

Puducherry Lt.Governr K Kailashnathan on Saturday inaugurated and participated in a national flag procession at the Pondicherry university to celebrate the success of "operation sindhoor".

Wide celebration is there across the country on the success of Operation Sindhoor which destroyed the terrorist camps in Pakistan. Students, ex-service men, and political parties are celebrating this. Already the congress and BJP took out national flag processions here.

Meanwhile, the NCC, NSs and students at the Pondicherry central university took out a national flag procession. Lt.Governor k Kailashnathan inaugurated the procession which commenced at the office of the Vice-chancellor.He also participated in the procession.

Home minister Namasivayam, legislator Kalyanasundaram, Vice-chancellor Prakash Babu, professors and students participated in the procession which went round the University campus. The participants raised slogan "Bharat matha Ki Jai".

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

VETTRI KURAL DATED 18.05.2025

RNI : PONTAM/00585

ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ்
MAX Life Insurance
ரிலையன்ஸ் லைப் இன்சூரன்ஸ்
ஆலோசனை மற்றும் பாலிசி சேவைக்கு அழைக்கவும்
M.முருகன்
9786222003, 9443494775

வெற்றிக் குரல்
VETTRI KURAL
நிறுவனர், ஆசிரியர் : வி.தங்கப்பிரகாசம், வாட்ஸ்அப் எண்: 86808 25919

வெற்றிக் குரல்
செய்தி மற்றும் விளம்பரத்திற்கு தொடர்பு கொள்ள
CELL: 86808 25919
94865 37526
vettrikural@gmail.com
86808 25919

புதுச்சேரி 18-5-2025 ஞாயிற்றுக்கிழமை • மலர் 2 இதழ் 62 • PUDUCHERRY 18-5-2025 SUNDAY • VOL: 2 ISSUE: 62 • 4 PAGES Rs. 6

# புதுவை பல்கலைக்கழகத்தில் ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில் மூவர்ண தேசபக்தி வெற்றி பேரணி

## கவர்னர், அமைச்சர், எம்.எல்.ஏ., மாணவ, மாணவிகள் பங்கேற்பு



புதுச்சேரி, மே 18-

புதுவைப் பல்கலைக்கழகத்தில், இன்று 17 மே, 2025, இந்திய ஆயுதப்படைகளின் வெற்றிகரமான நடவடிக்கையான ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கௌரவிக்கும் வகையில், மிகுந்த உற்சாகத்துடன் ஒரு பெரும் தேசபக்திப் பேரணியை நடத்தியது. இந்த நிகழ்ச்சியில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர்.

தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினர்களையும், முக்கிய பிரமுகர்களையும் துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு வரவேற்று, உரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் தலைமை ரெக்டர் கைலாஷ்நாதன் பேரணியை துவக்கி வைத்தார் இதில் புதுச்சேரி அரசின் உள்துறை மற்றும் கல்வி அமைச்சர் நமச்சிவாயம், காலாபட்டு சட்டமன்ற உறுப்பினர் பி.ம்.ல். கல்யாணசுந்தரம் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

இந்தப் பேரணியில், புதுச்சேரி பல்கலைக்கழகம், அதன் உறுப்புக் கல்லூரியான சமுதாய கல்லூரி மற்றும் இணைப்பு பெற்ற கல்லூரிகளை சேர்ந்த 2000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். இதில், என்சிசி மற்றும் என்எஸ்எஸ் தன்னார்வலர்களும் அடங்குவர். மாணவர்கள் தேசியக் கொடிகள் மற்றும் தேசபக்திப் பதாகைகளை ஏந்திச் சென்று, ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை உறுதிப்படுத்திய இந்திய வீரர்களின் வீரம் மற்றும் தியாகத்திற்கு தங்கள் நன்றியையும், ஆதரவையும், ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தி தேசபக்தி முழக்கங்களை எழுப்பினர்.

நமது இந்திய ஆயுதப்படைகளின் சிந்தூர் செயல்பாட்டின் வெற்றியைக் கௌரவிக்கும் வகையிலும், பல்கலைக்கழக சமூகத்தின் ஒருமைப்பாட்டை நாட்டத்துடன் வெளிப்படுத்தவும், புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் முயற்சிகளை மாண்புமிகு துணை நிலை ஆளுநர் கைலாஷ்நாதன் உளமார பாராட்டினார்.

தொடக்க உரையில் துணை வேந்தர் பேராசிரியர் ப. பிரகாஷ் பாபு அவர்கள், இந்தியாவின் பாதுகாப்புத் திறனை வலுப்படுத்துவதில் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அவர், தேசிய பாதுகாப்பில் ஆயுதப்படைகள் காட்டும் ஈடு இணையற்ற உறுதிப்பாட்டை நினைவூட்டினார் மற்றும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதில் இந்தியா எடுத்த நடவடிக்கையின் முக்கியத்துவத்தை விளக்கினார். இளைஞர்களிடம் காணப்படும் தேசிய உணர்வும், தீவிரமான பங்கேற்பு உணர்வும் பாராட்டத் தக்கவை எனவும் குறிப்பிட்டார்

பல்கலைக்கழக வளாகத்தின் முக்கிய பகுதிகள் வழியாக நடைபெற்ற இந்தப் பேரணி, தேசபக்தி பாடல்களுடன் முடிவடைந்தது. இந்திய வீரர்களின் தியாகங்களை நினைவுகூறும் இந்த நிகழ்வு, பங்கேற்பாளர்களிடையே தேசப்பற்று உணர்வை உருவாக்கியதாக அமைந்தது. பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குவதிலும், இத்தகைய துடிப்பான மற்றும் உள்ளடக்கிய நிகழ்வுகள் மூலம் தேசிய பெருமையை வளர்ப்பதிலும் புதுச்சேரி பல்கலைக்கழகம் உறுதியாக முன்னெடுக்கிறது.

நிகழ்ச்சியில் டாக்டர் க்ளெமென்ட் சகராஜ் லூர்டஸ், இயக்குநர் (கலாச்சாரம் மற்றும் கலாச்சாரஉறவுகள்), பேராசிரியர் ராஜ்னிஷ் பூட்டானி, பதிவாளர், பேராசிரியர் டிலாசர், நிதி அலுவலர், பேராசிரியர்கள் சதானந்த சுவாமி, தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், எம்.விஜயகுமார், நூலகர் மற்றும் பல்வேறு புல முதன்மையர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் பல்கலைக்கழக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.




ELECTRO POINT SERVICES
Pondicherry. Ph: 2245152, 2242939,
Cell No: 9843067022